# இலங்கைத் தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

## அபிவிருத்தி அலுவலர் II மற்றும் முகாமைத்துவ உதவியாளர் II (தொழிநுட்பம் சாரா) பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு செய்தல் உள்ளக/ வெளிவாரி

**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் (TRCSL) பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகைமைபெற்ற அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

| பதவி | அபிவிருத்தி அலுவலர் II<br>உள்ளக/ வெளிவாரி | முகாமைத்துவ உதவியாளர் II (தொழிநுட்பம் சாரா) - உள்ளக | முகாமைத்துவ உதவியாளர் II (தொழிநுட்பம் சாரா) - வெளிவாரி |
|---|---|---|---|
| கடமை விபரம் | 1. பதிவுகள், ஏடுகள் மற்றும் பேரேடுகள் என்பவற்றைப் பேணுதல்<br>2. விசாரணை மற்றும் அளவீடுகளை நடத்துதல்<br>3. தரவுகளை/புள்ளிவிவரங்களைச் சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வுசெய்தல்<br>4. அறிக்கைகள் மற்றும் ஆவணங்களைத் தயாரித்தல்<br>5. முகாமையாளர்களின் செயற்பாடுகளுக்கு உதவுதல் | 1. இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் நிர்வாக மற்றும் தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய கோவைகள், ஆவணங்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் பதிவுகள் என்பவற்றைப் பேணுதல்.<br>2. கணக்குகளைத் தயாரித்தல் மற்றும் வருவாய் மற்றும் செலவு தொடர்பான பேரேடுகள், ஏடுகள் மற்றும் பதிவுகளைப் என்பவற்றைப் பேணுதல்.<br>3. காசாகவும் வேறு ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவங்களிலும் கிடைப்பனவுகள் மற்றும் கொடுப்பனவுகளைக் கையாளுதல்.<br>4. சிரேஸ்ட முகாமையாளருக்கான தனிப்பட்ட உதவி தொடர்பான அனைத்து கடமைகளையும் கையாளுதல்<br>5. களஞ்சியக் காப்பு மற்றும் பதிவுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் என்பவற்றுடன் தொடர்பான அனைத்து விடயங்களும்.<br>6. முகாமைத்துவத்தினால் வேண்டப்பட்டவாறு கடிதங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்களை வரைதல் மற்றும் தட்டச்சு செய்தல்<br>7. காணி மற்றும் வளாகங்கள், பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்கள், வேறு சொத்துக்கள் என்பவற்றின் பெறுகை, பராமரிப்பு மற்றும் கையுதிர்த்தல் தொடர்பான ஆவணங்களுடன் தொடர்புபட்ட விடயங்களைக் கையாளுதல்.<br><br>8. இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் சேவையைப் பெற்றுக்கொள்வதில் தொடர்புடைய தகவல்களைப் பரப்புதல் மற்றும் வெளிவாரி வாடிக்கையாளர்களுக்கு உதவுதல்<br>9. இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பொது தொலைபேசி பரிவர்த்தனை ஊடாக தொலைபேசி வசதிகளைக் கையாளுதல்<br>10. கூட்டங்கள், ஊத்தியோகபூர்வ வைபவங்கள் மற்றும் ஏனைய நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதில் முகாமைத்துவத்திற்கு உதவுதல். | |
| **வேண்டப்படும் கல்வித் தகைமைகள்** | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒனறிலிருந்து வணிகம், கணக்கியல் முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், பௌதீக விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், கணிதம், புள்ளிவபரவியல், சட்டம், பொருளாதாரம், கணினி விஞ்ஞானம், இலத்திரனியல் அல்லது தொலைத்தொடர்பு துறையில் பட்டம் | க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் இரு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் மொழி/இலக்கியம், மற்றும் எண்கணிதம்/தூய கணிதம்/அடிப்படைக் கணிதம் / வர்த்தக எண்கணிதம் உள்ளடங்கலான 06 பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.<br><br>அத்துடன்<br><br>அபேட்சகர், விண்ணப்ப முடிவுத் திகதிக்கு உடனடியாக முன்னுறுகின்ற குறைந்தது 05 ஆண்டு தொடர்ச்சியாக திருப்பதிகரமான சேவையினை நிறைவுசெய்திருத்தல் வெண்டும். | க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம்/தமிழ், ஆங்கிலம், கணிதம் மற்றும் உள்ளடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்<br><br>அத்துடன்<br><br>ஆ) க.பொ.த (உயர் தரம்) பரீட்சையில் ஒரே தடவையில அனைத்து பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.<br>பழைய பாடத்திட்டத்தின் கீழ் மூன்று (03) பாடங்களில் சித்திபெற்றிருத்தல் இந்நோக்கத்திற்கு போதுமானதாகும். |
| **ஆட்சேர்ப்பு நடைமுறை** | ஆட்சேரப்பானது எழுத்துமூல போட்டிப் பரீட்சையைத் தொடர்ந்து கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். எழுத்துமூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் 40% இற்கு மேற்பட்ட புள்ளிகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் அனைத்துப் பாடங்களிலும் மொத்தப் புள்ளி 50%. இற்கு மேற்பட்டு இருக்க வேண்டும். எழுத்துமூல பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் 60% இனதும் நேர்முகப்பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் 40மூ இனதும் மொத்தத்தின் அடிப்படையில் இறுதித் தெரிவு இடம்பெறும்.<br><br>எழுத்துமூலப் பரீட்சை சிங்களம்/தமிழ் மொழியில் இடம்பெறும்.<br>எழுத்துமூல போட்டிப் பரீட்சைக்கான பாடங்கள்<br><br>(i) நுண்ணறிவுப் பரீட்டை – 1 மணித்தியாலம்<br>**இந்த வினாத்தாள் வேட்பாளரின் தர்க்கரீதியான திறன்இ பகுப்பாய்வு சக்தி மற்றும் எண்கணித திறன்களை மதிப்பிடுவதற்கானது.**<br>(ii) மொழிப் புலமை – 2 மணி<br>*இந்த வினாத்தாள், வேட்பாளரின் வெளிப்பாட்டு திறன், புரிதல், எழுத்துப்பிழை மற்றும் இலக்கண விதிகளைப் பயன்படுத்துவதில் உள்ள அறிவு ஆகியவற்றை மதிப்பிடுவதற்காக உள்ளது.*<br><br>*சிங்களம்/ தமிழ் மொழி - 1 மணி நேரம்*<br>*ஆங்கில மொழி - 1 மணி நேரம்* | ஆட்சேரப்பானது எழுத்துமூல போட்டிப் பரீட்சையைத் தொடர்ந்து கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். எழுத்துமூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் 40% இற்கு குறையாத புள்ளிகளைப் பெற்றவர்கள் மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் 60% இனதும் நேர்முகப்பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் 40% இனதும் மொத்தத்தின் அடிப்படையில் இறுதித் தெரிவு இடம்பெறும்.<br><br>எழுத்துமூலப் பரீட்சை சிங்களம்/தமிழ் மொழியில் இடம்பெறும்.<br>எழுத்துமூல போட்டிப் பரீட்சைக்கான பாடங்கள்<br>**(i) மொழிப் புலமை – 3 மணித்தியாலங்கள்**<br>பகுதி I - தாய் மொழியில் வெளிப்படுத்தும் இயலுமை, கிரகித்தல், எழுத்துப்பிழைகள், கட்டுரை, கடிதங்களை வரைதல், பந்திகளைச் சுருக்குதல் போன்ற வற்றைப் பரீட்சிப்பதற்கு<br><br>பகுதி II-. ஆங்கில மொழியில் வெளிப்படுத்தும் இயலுமை மற்றும் கிரகித்தல்,<br>கடிதங்களை/குறிப்புகளை வரைதல், இலக்கணம் மற்றும் எழுத்துப்பிழைகள் என்பவற்றில் இயலுமையைப் பரீட்சிப்பதற்கு<br><br>**(ii) உளச்சார்புப் பரீட்சை – 3** மணித்தியாலங்கள்<br>பகுதி I- எண்கள் மற்றும் கணிப்புகளில் தேர்ச்சியைப் பரீட்சிப்பதற்கு<br>3413<br>பகுதி II- இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் | ஆட்சேரப்பானது எழுத்துமூல போட்டிப் பரீட்சையைத் தொடர்ந்து கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். எழுத்துமூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் 40மூ இற்கு மேற்பட்ட புள்ளகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் அனைத்துப் பாடங்களிலும் மொத்தப் புள்ளி 50% இற்கு மேற்பட்டு இருக்க வேண்டும். எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் 60% இனதும் நேர்முகப்பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் 40% இனதும் மொத்தத்தின் அடிப்படையில் இறுதித் தெரிவு இடம்பெறும்.<br><br>எழுத்துமூலப் பரீட்சை சிங்களம்/தமிழ் மொழியில் இடம்பெறும்.<br>எழுத்துமூல போட்டிப் பரீட்சைக்கான பாடங்கள்<br>**(i) மொழிப் புலமை – 3 மணித்தியாலங்கள்**<br>பகுதி I- தாய் மொழியில் வெளிப்படுத்தும் இயலுமை, கிரகித்தல், எழுத்துப்பிழைகள், கட்டுரை, கடிதங்களை வரைதல், பந்திகளைச் சுருக்குதல் போன்ற வற்றைப் பரீட்சிப்பதற்கு<br><br>பகுதி II- ஆங்கில மொழியில் வெளிப்படுத்தும் இயலுமை மற்றும் கிரகித்தல், கடிதங்களை/குறிப்புகளை வரைதல், இலக்கணம் மற்றும் எழுத்துப்பிழைகள் என்பவற்றில் இயலுமையைப் பரீட்சிப்பதற்கு<br><br>**(ii) உளச்சார்புப் பரீட்சை – 3 மணித்தியாலங்கள்**<br>பகுதி I- எண்கள் மற்றும் கணிப்புகளில் தேர்ச்சியைப் பரீட்சிப்பதற்கு<br><br>பகுதி II- முகாமைத்துவ உதவியாளருடன் தொடர்புடைய அலுவலக நடத்தைகள் |

| | | | |
|---|---|---|---|
| | <u>நேர்முகப்பரீட்சைக்கு ஒதுக்கீடு செய்யப்டும் புள்ளிகள்</u><br><br>(1)தகைமைகள் (வேண்டப்பட்ட அடிப்படைத்தகைமைகளை விட)<br>i. 1 ஆம் அல்லது 2 ஆம் மேற்பிரிவு சித்தியுடன் பட்டம் - 10 புள்ளிகள்<br>ii. முதுமானிப் பட்டம் அல்லது பட்டப்பின்படிப்பு டிப்ளோமா - 15 புள்ளிகள்<br>iii. ஆங்கிலத்தில் டிப்ளோமா (12 மாதங்களுக்கு குறையாமல்)- 10 புள்ளிகள்<br>iv. தகவல் தொழில்நுடபத்தில் டிப்ளோமா (12 மாதங்களுக்கு குறையாமல்) - 10 புள்ளிகள்<br><br>v. அங்கீகரிக்கப்ட்ட தொழில்சார் நிறுவனமொன்றில் நிறுவன/இணை உறுப்புரிமை - 10 புள்ளிகள்<br><br>vi. தொடர்புடைய துறையில் திருப்பதிகரமான சேவை அனுபவம் (ஒவ்வொரு ஆண்டுக்கும் 4 புள்ளிகள்) உயரந்தபட்ச - 20 புள்ளிகள்<br>எலை. நேர்முகப்பரீட்சையில் செயலாற்றம் <u>25</u> புள்ளிகள்<br><u>100</u> புள்ளிகள் | ஆணைக்குழுவின் அடிப்படைய வதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றிய அறிவு, முகாமைத்துவ உதவியாளருடன் தொடர்புடைய அலுவலக நடத்தைகள், கோவைகளைப் பேணுதல், பதிவேடு<br><br>கோவைப்படுத்தல், பதிவேடுகளை நகர்த்தல், ஞாபகமூட்டல் குறிப்பேடு, உறுதிச்சீட்டுகள், அலுவலக முத்திரை போன்ற அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் பல்வேறு ஆவணங்கள் மற்றும் பொருட்கள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை தொடரபிலான அறிவைப் பரீட்சிப்பதற்கு<br><br>**(iii) கணினி அறிவு – 1** மணித்தியாலங்கள்<br><br><u>நேர்முகப் பரீட்டைச்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகள்:</u><br><br>i. க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் எண்கணிதத்தில் /தூய கணிதத்தில் விசேட சித்தி / "A" சித்தி- 4 புள்ளிகள்<br><br>க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்ளம்/தமிழ்/ஆங்கில் மொழியில் விசேட சித்தி/ "A" சித்தி - 4 புள்ளிகள்<br>ii. தகவல் தொழில்நுட்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து சான்றிதழ் - 4 புள்ளிகள்<br>iii. சிறந்த வரவு, செயலாற்றம், விசேட பங்களிப்புகள், தொடர்பாடல்கள் - 4 புள்ளிகள்<br>iv. நேர்முகப்பரீட்சையில் செயலாற்றம் - 4 புள்ளிகள்<br>மொத்தம - <u>20</u> புள்ளிகள் | கோவைகளைப் பேணுதல், பதிவேடு கோவைப்படுத்தல், பதிவேடுகளை நகர்த்தல், ஞாபகமூட்டல் குறிப்பேடு, உறுதிச்சீட்டுகள், அலுவலக முத்திரை போன்ற அலுவலகத்தில் பயன்படுத்தப்படும்<br><br>பல்வேறு ஆவணங்கள் மற்றும் பொருட்கள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை தொடரபிலான அறிவைப் பரீட்சிப்பதற்கு<br><br>**(iii) கணினி அறிவு – 1 மணித்தியாலம்**<br><br><u>நேர்முகப் பரீட்டைச்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகள்:</u><br><br>**1. கல்வித் தகைமைகள்:**<br>(i) அங்கீகரிக்கப்படநிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட முகாமைத்துவத்தில்/மனித வள முகாமைத்துவத்தில்/ நிதியில்/கணக்கீட்டில் /கணக்காய்வில் டிப்ளோமா (ஒரு வருடத்திற்கு குறையாமல்) - 05 புள்ளிகள்<br><br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட ஆங்கிலத்தில் டிப்ளோமா (ஒரு வருடத்திற்கு குறையாமல்) - 05 புள்ளிகள்<br><br>(iii) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தகவல் தொழில்நுட்பத்தில் டிப்ளோமா (ஒரு வருடத்திற்கு குறையாமல்) 05 புள்ளிகள்<br><br>**2. தொழில்சார் தகைமைகள்:-** 05 புள்ளிகள்<br><br>ICASL /CIMA/ACCA/CIM/AAT இன் பகுதி தகைமை<br><br>**3.தொடர்புடைய துறையில் அனுபவம்:** 10 புள்ளிகள்<br><br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் எழுதுவினைஞராக/ முகாமைத்துவ உதவியாளராக அல்லது அதனையொத்த பதவியொன்றில் திருப்திகரமான சேவையின் ஒவ்வொரு 1 ஆண்டுக்கும் 05 புள்ளிகள்)<br><br>**4.** நேர்முகப்பரீட்சையில் செயலாற்றம் - <u>20</u> புள்ளிகள்<br><br>i. மொத்தம் -<u>50</u> புள்ளிகள் |
| **வயது** | வயது 18 வருடங்களுக்கு குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாதும் இருக்க வேண்டும்.<br>உள்ளக அபேட்சகர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது | உள்ளக அபேட்சகர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது | வயது 18 வருடங்களுக்கு குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாதும் இருக்க வேண்டும். |
| **சம்பள அளவுத்திட்டம்** | TRC 6.1 - 105,101- (10x2112)-(10x2816)-(10x3519)-(10x4223) - 231,801 | TRC 8.2 - 89,336- (10x1408) -(10x2112)-(10x2816)-(10x3519) - 187,886 | |
| **விண்ணப்பிக்கும் முறை** | 1. விண்ணப்பப் படிவத்தை இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ வலைத்தளமான www.trc.gov.lk இலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.<br>2. தொடர்புடைய படிவத்தை பயன்படுத்தாது அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.<br>3. விண்ணப்பங்கள் தெளிவாகவும் வாசிக்கத்தக்கதாகவும் இருக்க வேண்டும் மற்றும் தேவைப்பாடுகளுடன் பொருந்தாத விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்படாது<br>4. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கல்வி/தொழில்சார் தகைமைகளின் சான்றிதழ்களின் பிரதிகளும் பணி அனுபவ விவரங்களும் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.<br>5. **வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு**: அனைத்து விண்ணப்பங்களும் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளின் சான்றிதழ்களின் பிரதிகளுடன் சேர்த்து "பணிப்பாளர் நாயகம் - இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இல. 276, எல்விடிகல மாவத்தை, கொழும்பு 08" என்ற முகவரிக்கு **2025.08.09** அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிட வேண்டும்.<br>6. **உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு** : வேண்டப்பட்ட அனைத்து அடிப்படைத் தகைமைகளையும் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளின் சான்றிதழ்களின் பிரதிகளுடன் சேர்த்து பிரிவின் பிரதானியின் பரிந்துரையுடன் "பணிப்பாளர் நாயகத்திடம்" **2025.08.09** ஆம் திகதிக்கு முன்னர் சமர்பிக்கவேண்டும். | | |
| **பொதுவான நிபந்தனைகள்** | 1. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டுமென்பதுடன் பதவியின் கடமைகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்கும், நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் பொருத்தமானவராக இருக்க வேண்டும்.<br>2. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வேண்டப்பட்ட தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பதாரர்கள் பரிசீலனையிற் கொள்ளப்பட மாட்டார்.<br>3. எவ்விதத்திலும் செல்வாக்குத் தேடுவது தகைமையிழக்கச்செய்யும்.<br>4. நிரப்ப வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கையை தீர்மானிப்பதற்கு அல்லது பிற்போடுவதற்கு/இரத்துச்செய்வதற்கு **இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு பூரண உரிமையைக் கொண்டுள்ளது.**<br>5. இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவானது ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபையொன்றாகும், அதில் தொழிலுக்காக ஆட்சேர்க்கப்படுகின்ற எவரேனும் ஆள், இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டுப்பாட்டுக்கு கீழுள்ள நிறுவனமொன்றில் உள்ள பதவியொன்றில் அல்லது பதவியொன்றுக்கு அவரது துணைவரின் அல்லது எவரேனும் குடும்ப உறுப்பினரின் நியமனத்திற்கு அல்லது தொழிலுக்கு நேரடியாக அல்லது நேரடியின்றி ஊக்குவிக்க, முன்னேற்ற அல்லது ஆதரவு தேடலாகாது. | | |

பணிப்பாளர் நாயகம்
இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழு
இலக்கம்: 276
எல்விட்டிகல மாவத்தை
கொழும்பு 08